Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 6-10-2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி – புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 06-10-2026 – செவ்வாய்க்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள் :**

நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் **பொருளாதார வளர்ச்சி குறித்த உலக வங்கியின் கணிப்பு**, 7.1 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

மலைப் பகுதி கிராமங்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதில் உள்ள சிரமங்களை, மருத்துவர்களின் மன உறுதி மூலமாகவே, தீர்க்க முடியும் என்று, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

தேசிய அளவில், **ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து ஆணையம்** ஒன்றை அமைக்கும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், மாலை 5 மணி வரை, 78.83 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன.

**உலக வங்கி -1 (6)**

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த உலக வங்கியின் 6.6 சதவிகித கணிப்பு, 7.1 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில், ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாக, 7.8 சதவிகித அளவில் இந்தியா வளர்ச்சி அடைந்திருப்பதை கருத்தில் கொண்டு, முழு ஆண்டிற்கான கணிப்பும் அதிகரிக்கப் பட்டுள்ளது. இது குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு...

**(வாய்ஸ்)**

**உலக வங்கி -2 (17)**

**(வாய்ஸ்)**

இந்தியாவில், தனிநபர் நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதால். பொருளாதார வளர்ச்சிக்கு அதிக உந்துதல் கிடைக்கும் என்றும், பொது முதலீடுகள் உயர்த்தப்பட்டு, சாதகமான நிதி மற்றும் கொள்கைச் சூழலும் உருவாக்கப் படுவதால், வளர்ச்சிக்கு மேலும் அனுகூலமாக இருக்கும் என்றும், உலக வங்கி தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில், இந்தியாவின் ஏற்றுமதியும் அதிகரித்து இருப்பதால், உலக அளவிலான நிச்சயமற்ற தன்மை காரணமாகத் தனியார் முதலீடுகளில் ஏற்படும் பாதிப்பு குறையும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இந்தியாவில் தொழில்துறையின் செயல்பாடுகளும், எதிர்பார்க்கப் பட்டதை விட நன்றாகவே உள்ளதாகவும், குறிப்பாக, உள்கட்டமைப்பு, கட்டுமானப் பொருள் உற்பத்தி, மற்றும், மின்சார உற்பத்தித் துறையில் வலுவான வளர்ச்சி எட்டப் பட்டுள்ளதாகவும், உலக வங்கி தெரிவித்துள்ளது. ஆயினும், தென்மேற்கு பருவமழையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக, வேளாண்துறையில் சில பலவீனங்கள் ஏற்படலாம் என்றும், கிராமப்புற தேவைகள் ஓரளவு பாதிக்கப்பட, வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, இந்தியாவின் சேவைத் துறை, தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

## முர்மு (16)

குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இன்று, ஹிமாச்சலப் பிரதேசத்தில், பிலாஸ்பூர் எய்ம்ஸ் மருத்துவ கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, படிப்பு முடித்த மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார். இளம் மருத்துவர்கள் தாங்கள் படித்த கல்லூரியின் பெயரை காப்பாற்றும் விதத்தில், நடந்து கொள்ள வேண்டும் என, அவர் தமது உரையில் கேட்டுக் கொண்டார். டாக்டர்கள், கருணை மற்றும் சேவை உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும், எதிர்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். ஹிமாச்சலப் பிரதேசம் போன்ற மலைப் பகுதிகளில், தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதில், பல சிரமங்கள் உள்ள போதிலும், மருத்துவர்களின் மன உறுதி மூலம், இப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று அவர் கூறினார். மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினால், மக்களுக்கு கிடைக்கும் பலன்களை மாநில அரசுகள் விரிவான முறையில் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும் என, குடியரசுத் தலைவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

## ராதாகிருஷ்ணன் (15)

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், இன்று புதுடெல்லியில், லால்பகதூர் சாஸ்திரி தேசிய சமஸ்கிருத பல்கலைக் கழகத்தின் 2ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, படிப்பு முடித்த மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார். இந்திய மொழிகளை ஒருங்கிணைக்கும் தங்கச் சரடு, சமஸ்கிருதம் என்றும், உலக அளவிலான இலக்கிய – தத்துவ மற்றும் அறிவியல் அரங்கில், சமஸ்கிருத மொழிக்கு மகத்தான இடம் இருப்பதாகவும், அவர் கூறினார்.

சமஸ்கிருதம் உட்பட, இந்திய கலாச்சாரத்தின் செழுமைக்கு பங்களிக்கும் எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், அரசு முக்கியத்துவம் அளிப்பதாக குடியரசு துணைத் தலைவர் தெரிவித்தார். 2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில், இந்திய பாரம்பரிய ஞானத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப் படுவதையும், இந்தியா மற்றும் வெளிநாடுகளில்

இருந்து தொன்மையான ஓலைச்சுவடிகளை சேகரித்துப் பாதுகாக்க, ஞான பாரதம் இயக்கம் தொடக்கப்பட்டு இருப்பதையும், அவர் சுட்டிக் காட்டினார்.

**அமைச்சரவை (17)**

தேசிய அளவில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து ஆணையம் ஒன்றை அமைக்கும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய பொருளாதாரம் 7 முதல் 8 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளை சமாளிப்பதற்கான, நீண்டகால போக்குவரத்து மாஸ்டர் பிளான் ஒன்றை, இந்த ஆணையம் தயாரிக்கும் என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறினார். புதிய ஆணையம் அமைக்கப் படுவதால், போக்குவரத்துத் துறையில், ஆராய்ச்சி, திட்டமிடல், கண்காணிப்பு, மதிப்பீடு, மற்றும், தாக்கங்களின் அளவீட்டை வலுப்படுத்த ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறு-மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு முதலீட்டிற்கான, தனி வளர்ச்சி நிதி ஒன்றை அமைக்கும் உத்தேசத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. குஜராத் முதலமைச்சராகவும், பின்னர் பிரதமராகவும், அரசுத் தலைமையில் 25 ஆண்டுகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பூர்த்தி செய்திருப்பதை பாராட்டியும், இன்று, மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**இடைத் தேர்தல் -1 (20)**

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கத்தில், மொத்தம் 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது. தமிழகத்தின் தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளும், புதுச்சேரியின் தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதியும் இதில் அடங்கும்.

தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதியில், மாலை 5 மணி நிலவரப்படி, 78.83 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. மாலை 5 மணி வரை, தமிழகத்தின் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில், 83.86 சதவிகித

வாக்குகளும், தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில், 78.53 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன. இறுதி வாக்குப் பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதியில், அனைத்து வாக்குச் சாவடிகளிலும், இன்று காலை முதலே வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். குறிப்பாக, முதல்முறை வாக்களிக்க தகுதி பெற்ற இளம் வாக்காளர்கள், மிகுந்த ஆர்வத்துடன் வாக்களிக்க வந்தனர். என்ஆர்காங்கிரஸ் வேட்பாளர் திரு. அசோக் ஆனந்த், லாஸ்பேட்டை குளுனி பள்ளியில் உள்ள வாக்குச் சாவடியிலும், திமுக வேட்பாளர் திரு. சேது செல்வம், பாக்கமுடையான் பேட் நூலகத்தில் உள்ள வாக்குச் சாவடியிலும் வாக்களித்தனர்.

வாக்குப் பதிவின் போது, வாக்குச் சாவடிகளை நேரில் பார்வையிட்ட, முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கலைவாணன், செய்தியாளர்களிடம் பேசுகையில், அமைதியான

### இடைத் தேர்தல் - 2 (7)

முறையில் வாக்குப் பதிவு நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். அனைத்து 31 வாக்குச் சாவடிகளிலும், வாக்காளர்களின் வசதிக்காக, நிழற்பந்தல், குடிநீர், கழிவறை, மற்றும், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்வுதளப் பாதை வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. CRPF படையினர், மாநில காவல்துறையினர் மற்றும் IRB காவலர்கள் பாதுகாப்புப் பணியில், ஈடுபடுத்தப்பட்டனர்.

இன்று இடைத்தேர்தல் நடைபெற்ற தொகுதிகளில், வாக்கு எண்ணிக்கை, வரும் 9ஆம் தேதி நடைபெறும்.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை - 1 (14)**

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்**, இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவு, நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, **ஒரே நாடு – ஒரே அரசியல் சாசனம்** என்னும் நிலைப்பாடு வலுப்பட்டு இருப்பது குறித்து, இன்று, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம்...

**(வாய்ஸ்)**

**மக்கள் சேவை மூலமான தேச சேவை - 2 (19)**

**(வாய்ஸ்)**

அரசியல் சாசனத்தில் 70 ஆண்டுகளாக நீடித்து வந்த 370ஆவது பிரிவு, கிட்டத்தட்ட எவரும் தொட்டுவிடக் கூடாத விதியாகவே கருதப்பட்ட நிலையில், மத்தியில் அடுத்தடுத்து அமைந்த அரசுகள், அதை பற்றி சிந்திப்பதையே தவிர்த்து வந்தன. 370ஆவது அரசியல் சாசன பிரிவு மீதான நம்பிக்கையைக் காட்டிலும், அதை நீக்கினால் ஆபத்து என்ற அச்சமே, இதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில், 2016ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு, அதன் வரலாற்றிலேயே மிக அதிகமாக, 51 நாட்களுக்கு நீடித்தது. ஒரே ஒரு கொலை சம்பவத்திற்காக, பள்ளிகள், 8 மாதங்களுக்கு மூடப்பட்டு இருந்தன. அனைவரும் பெரும் குழப்பத்தை எதிர்பார்த்த நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, வன்முறைகளை கட்டுப்படுத்த, வலுவான திட்டம் ஒன்றை வைத்து இருந்தது. குடியரசுத் தலைவரின் ஒரு உத்தரவு, நாடாளுமன்றத்தின் ஒரு தீர்மானம், ஒரு மறுசீரமைப்புச் சட்டம் ஆகிய மூன்றும் ஒரே நாளில் கொண்டுவரப் பட்டதால், அறிவிப்பிற்கும் –

அமலாக்கத்திற்கும் இடையே அவகாசமின்றி, அவ்வாண்டு கோடைக்காலம் அமைதியாகக் கழிந்தது.

370ஆவது அரசியல் சாசனப் பிரிவு, ஆரம்பத்தில் இருந்தே தற்காலிக விதிமுறைதான் என்று கூறி, உச்சநீதிமன்றம், 2023ஆம் ஆண்டு டிசம்பரில், அரசின் இந்த, எல்லா நடவடிக்கைகளையும் அங்கீகரித்தது.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை - 3 (6)**

**(வாய்ஸ்)**

இதைத் தொடர்ந்து, 10 ஆண்டுகளில் முதல் முறையாக, 2024ஆம் ஆண்டு ஜம்மு – காஷ்மீரில், சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

1949ஆம் ஆண்டில், தற்காலிக அடிப்படையில் கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவை, தற்காலிக பிரிவாகவே கருதி நீக்கவும், **ஒரே நாடு – ஒரே அரசியல் சாசனம்** என்னும் கொள்கையை நிலைநிறுத்தவும், 70 ஆண்டுகள் தேவைப் பட்டிருப்பதே, இதில் கவனிக்க வேண்டிய அம்சமாகும்.

**வானிலை (13)**

இன்று கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதரப் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 12ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, கோவை மாவட்டம் வால்பாறை, தருமபுரி மாவட்டம் நம்மாண்டஹள்ளி உள்ளிட்ட இடங்களில், தலா 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

**கிரிக்கெட் (7)**

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே, 5 போட்டிகளைக் கொண்ட, 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், முதலாவது போட்டி, இன்று இரவு 7 மணிக்கு, லக்னோவில் நடைபெற உள்ளது. வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில், 2-1 என்ற கணக்கில், ஏற்கனவே வெற்றி பெற்றுள்ள இந்தியா, அண்மையில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கம் வென்ற உற்சாகத்துடன் இன்றைய போட்டியில் களமிறங்குகிறது.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் **பொருளாதார வளர்ச்சி குறித்த உலக வங்கியின் கணிப்பு**, 7.1 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

மலைப் பகுதி கிராமங்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதில் உள்ள சிரமங்களை, மருத்துவர்களின் மன உறுதி மூலமாகவே, தீர்க்க முடியும் என்று, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

தேசிய அளவில், **ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து ஆணையம்** ஒன்றை அமைக்கும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், மாலை 5 மணி வரை, 78.83 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK**